## அத்தியாயம் 6

காலை நேர பரபரப்பு ஏதுமின்றி அமைதியாக இருந்தது அந்த அலுவலகம். தன்னுடைய கேபினில் அமர்ந்து மெயிலில் கிளையண்ட்ஸ்கு வருமான வரி சம்பந்தப்பட்ட அவர்களின் சந்தேகங்களுக்கான விடைகளை அளித்துக் கொண்டிருந்தாள் கீதா.

மற்றவர்களை போல் ரிட்டர்ன் ஃபைல் செய்ததும் வேலை முடிந்தது என்று விட்டுவிடுபவள் இல்லை அவள். அதற்கு பிறகு ஆர்டர் செக் செய்து அதற்கு ஆன்லைனில் பதிலளிப்பது, வரி கட்ட சொல்லியிருந்தால் கிளையண்ட்ஸ்கு தகவல் தெரிவித்து அவர்களை கட்ட சொல்லுவது என்று அந்த வேலையை முழுமையாக முடித்தால் மட்டுமே அவளுக்கு தூக்கம் வரும்.

அவளுடன் பணியாற்றும் புவனா அடிக்கடி சொல்லுவாள் " ஏன் இதயெல்லாம் தலைல தூக்கி போட்டுக்கிற கீத்து?? அவங்களுக்கு தான் இன்ஃபர்மேஷன் மொபைலுக்கு போகுமே? அதுக்கு அப்புறமா அவங்க அத பாத்துக்க மாட்டாங்களா?"

அதை மறுத்தவள் " நோ புவி, என்னோட கிளையண்ட்ஸ்கு என்னால முடிஞ்ச பெர்ஃபெக்ட் சர்வீஸ் குடுக்கணும்கிறது என்னோட ஒபினீயன். ஒரு வேலைய ஆரம்பிச்சா அத ஃபுல்லா கம்ப்ளீட் பண்ணா தானே நல்லா இருக்கும்" என்பாள்.

இதனாலே ஆடிட்டர் ரங்கநாதனுக்கு அவள் மேல் தனி மரியாதை.

இன்றும் அது போல எல்லா மெயிலையும் பார்த்து விட்டு தன்னுடைய கேபினை சுத்தம் செய்து கொண்டிருந்தாள் கீதா.

திடீரென்று " வருண் சார்" என்ற நியாஸின் குரல் கேட்டதும் வெளியே வந்து என்ன என்று பார்த்தாள்.

அது அவர்களின் கிளையண்ட் வருண் மாதவ். ரங்கநாதனை பார்க்க வந்தவர் அவர் இல்லையென்றதும் அவரின் உதவியாளர் நியாஸிடம் தகவலை சொல்லிவிட்டு கிளம்பி விட்டார்.

அவர் சென்ற பின் கேபினுக்குள் வந்த கீதாவுக்கு வருணின் ப்ரொ:ஃபைலை செக் பண்ணி பார்த்தால் என்ன என்று தோன்றவும் லாக் இன் செய்தாள். அவனுடைய டைம் லைன் ஓப்பன் ஆனது.

முதலில் அவனை பற்றிய விபரங்களை படிக்க ஆரம்பித்தாள். வருண் சுவாமிநாதன், நேட்டிவ் திருநெல்வேலி. அங்கேயே பள்ளி படிப்பும் முடித்திருந்தான். கல்லூரி சென்னையில் படித்ததாகவும், பின் அங்கேயே ஒரு ஐ.டி கம்பெனியில் வேலையில் சேர்ந்து ஒரு வருடத்தில் விலகியதாகவும் அதில் போட்டிருந்ததை பார்த்தவள் மனசுக்குள்ளே " ஓ! அப்போ சார் வி.ஐ.பி போல" என்று சொல்லிக் கொண்டாள். ஆனால் அடுத்த வரியை பார்த்தவள் அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டாள்.

' **studying M.E in Aachen University, Germany**' இதை பார்த்ததும் அவன் குட் மார்னிங் சொன்னதற்கான காரணம் புரிந்தது. " ஐயோ இது தெரியாம அவனை ஏலியன் லெவலுக்கு கிண்டல் பண்ணிட்டியே கீத்து" என்று தலையில் செல்லமாக குட்டி கொண்டாள்.

தொடர்ந்து பார்க்கும் போது அவனின் சுற்றுலா சென்ற புகைப்படங்களாகவே வர, இவனுக்கு ஊர் சுத்த ரொம்ப பிடிக்கும் போல என்று நினைத்து கொண்டாள். வரிசையாக பதிவுகளை பார்த்துக் கொண்டே வந்தவள் ஒரு புகைப்படத்தை பார்த்ததும் சந்தோசத்தில் அவளை அறியாமல் வாவ் ரியாக்ட் செய்தாள்.

அது வருணின் முழு குடும்பமும் இருக்கும் புகைப்படம். அவனுடைய அக்காவின் திருமண நாள் என்று பதிவிட்டு இருந்தான். அதற்கு பின் எல்லாமே அவன், அவனுடைய கஸின்ஸ் செய்த லூட்டிகள் பற்றிய புகைப்படங்கள் தான்.

இது எல்லாவற்றையும் பார்த்தவளுக்கு வருண் மேல் பொறாமை கூட வந்தது. “இவ்வளவு பெரிய குடும்பம் அவனுக்கு இருக்கு, எனக்கு ?? என்று நினைத்தவள் அவனை நினைத்து வருத்தமும் அடைந்தாள். இவர்களை விட்டு பிரிந்திருப்பது அவனுக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கும் என்று அவனை நினைத்து பரிதாபப் பட்டாள்.

" ஹி இஸ் சோ லக்கி டு ஹேவ் அ லவ்வபிள் ஃபேமிலி" என்று சொல்லிவிட்டு ஸ்கிரீனில் தெரிந்த அவன் குடும்பத்திற்கு திருஷ்டி கழித்து, "யாரு கண்ணும் உங்க மேல படக் கூடாது. இப்பிடியே லைஃப் லாங் நீங்க

எல்லாரும் ஒன்னா ஒத்துமையா இருக்கணும்" சொல்லிவிட்டு வருணுக்கு மெஸெஞ்சரில் கால் செய்தாள் கீதா.

அவன் எடுத்ததும் "ஹாய் வருண், ஏர்லி மார்னிங் டிஸ்டர்ப் பண்ணிட்டேனா? இப்போ அங்க என்ன டைம்??" என்று அவள் கேட்கவும் அவள் தன்னுடைய ப்ரொஃபைலை பார்த்து விட்டாள் என்பதை உறுதி செய்து கொண்டான் வருண்.

" ஃபைனலி மேடம் என்னோட ப்ரொஃபைலை பாத்துட்டிங்க போல"

" யா, ஜஸ்ட் நௌ! யூ இடியட் ஏன்டா நீ ஜெர்மனில இருக்கேனு என் கிட்ட சொல்லலை?? போ நான் உன் கூட பேச மாட்டேன்"

" நான் உனக்கு தெரிஞ்சிருக்கும்னு நெனைச்சேன் மேடம். நீ இப்படி ப்ரொஃபைல் கூட செக் பண்ணாம என் ரெக்வஸ்டை அக்கெப்ட் பண்ணிருப்பனு நான் யோசிக்கல கீத்து. கோச்சிக்காத ப்ளீஸ்"

" இட்ஸ் ஓகே. நான் உன்னோட பெரிய அழகான குடும்பத்துக்காக உன்ன மன்னிச்சிட்டேன்"

" ரியலி?? எல்லா போட்டோஸும் பாத்தியா?? மை காட்.... ஓகே மேடம், இப்போவாச்சும் என்னை நம்பி உங்க ஃப்ரெண்ட்டா ஏத்துப்பிங்களா?

சிறிது நேரம் அமைதி காத்த கீதா " எனக்கு உன்னோட ஃபேமிலி ரொம்ப பிடிச்சிருக்கு வருண்! உன்னோட ஃப்ரெண்டா இருக்குறதுல எனக்கு எந்த அப்ஜெக்சனும் இல்ல" என்று சொல்லவும் வருணுக்கு வந்த சந்தோசத்துக்கு அளவே இல்லை.

" தேங்க்யூ சோ மஷ் டியர். ஐயாம் வெரி ஹாப்பி நவ்" என்று சொல்லவும் கீதா " இப்போ நீ யார பாத்து டியர்னு சொன்ன??" என்று ஆரம்பித்தாள்.

சிரித்து கொண்டே அவளை சமாதானப்படுத்தியவன் அவன் குடும்பம், கஸின்ஸ், அவர்களுடைய கேங் பற்றி விலாவரியாக கூறினான்.

இப்படியாக இரண்டு மாதங்களில் இவர்கள் இருவரும் பேசி ஒருவரை பற்றி ஒருவர் நன்றாக புரிந்து கொண்டனர். ஒரு முறை வீடியோ கால் பேசும் போது கீதாவையும் கனெக்ட் செய்து கஸின்ஸிடம் என்னுடைய தோழி

என்று வருண் அறிமுகப்படுத்தவும் கீதாவுக்கு அவன் மேல் ஒரு புது மரியாதையே வந்தது.

அவனுடைய கஸின்ஸ் கீதாவிடம் உரிமையாக பேசவும் கீதாவிற்கு தன் குடும்பத்தின் நினைவில் கண் கலங்கியது. ஏற்கெனவே வருண் கீதாவின் குடும்பத்திற்கு நடந்த விபரீதத்தை கூறியிருந்ததால் அவர்கள் அவளை கலாய்த்து சிரிக்கவும் வைத்தனர்.

அந்த அழகான தருணம் முடியும் போது கீதா நேத்ராவை " அண்ணி" என்று அழைக்க நேத்ராவும் அதை புன்னகையுடன் ஏற்று கொண்டாள். பதிலுக்கு பிரியாவும் அனுவும் கீதாவை " அண்ணி " என்று கூறவும் வருணுக்கு திகிலானது.

" இப்போ இவளை என்ன சொல்லி சமாளிக்கப் போற வருண்??" என்று மனசாட்சி அவனை கலாய்த்தது. ஆனால் அவன் பயப்பட தேவையின்றி கீதாவும் அவர்கள் கூறியதை ஏற்றுக் கொள்ளவும் அவனுக்கு நிம்மதி ஆனது.

இந்த தருணங்களையெல்லாம் யோசித்து கொண்டே கீதாவின் போட்டோவை பார்த்தவன் மனதில் ஒரு சின்ன குழப்பம். கீதாவை தனக்கு ஏன் இவ்வளவு பிடிக்கிறது என்பது தான்.

அவன் குழப்பத்துடனே சுற்ற ஒரு நாள் அவள் ஸ்ரீதேவியின் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்காக அவளின் வீட்டில் இருக்கும் போது வருண் வாட்ஸாப் காலில் அழைத்தான்.

" ஹலோ வருண்! என்ன மிஸ்டர் ஜெர்மன் இந்த டைம்ல கால் பண்ணிருக்க?"

" சும்மா தான் கீத்து. நீ பிஸியா இருக்கியா??"

" இன்னிக்கு ஸ்ரீதேவிக்கு பர்த் டே. நாங்க அவ வீட்டில இருக்கோம்"

" எந்த ஸ்ரீதேவி??"

" என்னோட ஃப்ரெண்ட்பா. உனக்கும் ஃபேஸ்புக்ல ஃப்ரெண்ட்டா இருக்காடா"

" ஓ! அந்த பொண்ணுக்கா?? கன்வே மை விஷ் டியர் "

" நீ டியர்னு சொன்னனு வை நான் நேரா ஜெர்மனிக்கு வந்து உன்னை கொன்னுடுவேன் வருண்" என்று அவள் சின்ன குழந்தை மாதிரி சிணுங்கவும் வருணுக்கு சிரிப்பு வந்தது. அவனுக்கு தெரியும் இப்படி சொன்னால் அவள் கோபப்படுவாள் என்று. அவளை கோபப்படுத்தி பார்ப்பதில் அவனுக்கு ஒரு சந்தோஷம்.

" அஹான்! நீ தைரியமான ஆளா இருந்தா வந்து தான் பாரேன்"

" போடா! என்ன கடுப்பாக்கணும்னே கால் பண்ணியா நீ? ஏய் கேக் கட் பண்ண போறாங்க..நான் அப்றமா பேசுறேன். பை"என்று காலை கட் பண்ண போனவளை தடுத்தவன் " நான் கேக் கட் பண்ணுறத பாக்கணும் கீத்து. வீடியோ கால் பண்ணு" என்று கூறினான்.

கீதாவும் வீடியோ கால் பண்ணி விட்டு அவனுக்கு கேக் கட் பண்ணுவது தெரியுமாறு போனை வைத்தவள் ரியாவின் பக்கத்தில் நின்று கொண்டாள். வருண் அங்கு நடப்பதை பார்த்து கொண்டிருந்தவன் முதல் முறையாக கீதாவை புடவையில் பார்த்தவன் ஸ்தம்பித்து நின்றான்.

எப்போதும் போல் எந்த வித மேக்கப்பும் இல்லாமல் காதில் சிம்பிளாக ஒரு ஸ்டட், அழகான ஆப்பிள் ரெட் புடவையில் தன் நீண்ட கூந்தலை முன் புறமாக விட்டு கேக் கட் செய்வதை பார்த்து கொண்டிருந்த கீதாவை பார்த்தவன் மனதிற்குள்ளேயே " கீத்து நீ இவ்ளோ அழகா" என்று வியந்து கொண்டிருந்ததை அவள் அறியவில்லை. அந்த தருணம் வருணின் மனதில் சத்தம் இல்லாமல் காதல் வந்து நுழைந்து கொண்டது.

அன்று தூங்குவதற்கு முன் கீதாவின் போட்டோவை பார்த்தவன், " ஒரு ஃப்ரெண்ட்டா உன் கூட பழக ஆசப்பட்டேன் கீத்து. நீ என்ன ஃப்ரெண்டா ஏத்துக்கிட்டப்போ எவ்ளோ சந்தோசப்பட்டேன் தெரியுமா?? பட் இன்னிகு நீ எனக்கு புதுசா தெரிஞ்ச. இந்த கீதா எனக்கு புதுசு. இந்த கீதாவை எனக்கு ரொம்பவே பிடிச்சிருக்கு. ஃப்ரெண்டா மட்டும் இல்ல. யெஸ். ஐ டிஸைடட்.. என்னோட ஃபேமிலிக்காக என்னை பிடிக்கும்னு சொன்ன நீ என்னோட வாழ்க்கை முழுக்க என் கூட இருக்கணும் கீதா. ஒரு தோழியாகவும், என்னோட மனைவியாகவும்" என்று சொன்னவன் அதே இனிய நினைவுகளில் தூங்க சென்றான். அவன் அறியவில்லை, அதற்காக அவன் கஷ்டப்படப் போகிறான் என்று. ஒரு வேளை தெரிந்திருந்தால் இன்று போட்டோவிடம்

பேசியதை கீதாவிடமே கூறியிருப்பான். வருங்காலத்தில் நிகழவிருக்கும் குழப்பங்களையும் தடுத்திருப்பான்.......